# மேய்ப்பனின் சத்தம் கேட்கும் ஆடுகள்

***யோவா 10:3*** *வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டுபோகிறான்.*
***யோவா 10:27*** *என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது.*
***ஏசா 30:21*** *நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.*

மறுபடியும் பிறந்த ஒவ்வொருவரும் தேவனுடைய பிள்ளை. தேவனை, அப்பா! பிதாவே! என்று கூப்பிடும் உரிமை நமக்கு உண்டு. நாம் ஒவ்வொருவரும் ஒரு வெற்றிகரமான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதே அவருடைய விருப்பம், சித்தம், பொறுப்பு. இதற்காக, நமக்கும் நமது பிதாவுக்கும் இடையில் நல்ல ஒரு தொடர்பு இருக்க வேண்டியது மிகவும் அவசியம். இரட்சிப்பில் நாம் பெற்றுக்கொண்ட ஒரு மகாப்பெரிய ஆசீர்வாதம் **'தேவனோடு நெருங்கிய தொடர்பு'.** இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் தேவனோடு நெருங்கிய தொடர்பு உள்ளவர்களாய், தேவனுடைய சத்தத்தை கேட்பவர்களாய், அவரது சித்தத்தை அறியும் திறன் உள்ளவர்களாய், அவரது வழிகாட்டுதலின்படி தீர்மானங்கள் முடிவுகள் எடுத்து அதன்படி வாழ்க்கையில் சகலத்தையும் செய்கிறவர்களாக இருக்கவேண்டும். இதுதான் தேவனுடைய சித்தம். இப்படி வாழ்வது நமது உரிமையும் கூட. ஆனாலும், இந்த சத்தியத்தை அறியாத பல அருமையான விசுவாசிகளும் இந்த சித்தத்தின் படி நடக்காமல், முறையான வழிகாட்டுதல் இன்றி, அல்லது முறையற்ற வழிகாட்டுதலினால், அல்லது தங்கள் சுய மனவிருப்பத்தின் படி தவறான முடிவுகளை எடுத்து பலவிதமான இன்னல்களுக்குள்ளும் பிரச்சினைகளுக்குள்ளும் பாடுகளுக்குள்ளும் அகப்பட்டுக்கொள்கிறார்கள். அதன்பின் இந்த பாடுகள் மூலமாக, தேவன் அவர்களுக்கு கற்றுக்கொடுப்பதாக தேவன் மேல் குற்றம் சுமத்துகிறார்கள். இது வேதாகமத்தின் போதனை அல்ல ( ***எரே 29:11; 3 யோவான் 2*** ). **இந்த வேதபாடத்தில், தேவனுடைய சத்தத்தை கேட்டு, அவரது சித்தத்தை அறிந்து அவரது வழிகாட்டுதலின்படி சரியான தீர்மானங்களை வாழ்க்கையின் எந்த சூழ்நிலைகளிலும் எடுத்து, இயேசுவுக்குள் ஒரு வெற்றிகரமான விசுவாச வாழ்க்கை வாழுவது எப்படி என்று அறிந்து கொள்வோம்.**

நம் தேவன் "பேசுகிற தெய்வம்". ***சங்கீதம் 115*** ல் குறிப்பிடப்பட்டுள்ள தேவர்களைப்போல அவர் பேசாதவர் அல்ல. அவர் தமது சொந்த சத்தத்தின் மூலமாக நமக்கு போதித்து, வழிகாட்டி, கற்றுத்தந்து நம்மை நடத்துவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிற தேவன்.
***ஆதி 1:3*** *தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது* ***என்றார்,*** *வெளிச்சம் உண்டாயிற்று. (* ***ஆதி 1:6,8,9,10...****).*
***யோவா 1:1*** *ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.*
தேவன் மனிதனை சிருஷ்டித்தபின் செய்த முதல் காரியம், " **அவனோடு பேசியது** ". ***ஆதி 1:28*** *பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று* ***சொல்லி,*** *தேவன் அவர்களை* ***ஆசீர்வதித்தார்.***
தொடக்கத்தில் இருந்தே, மனிதனோடு பேசுவதும் மனிதனோடு சமயம் செலவழிப்பதும் தேவனுடைய ஒரு வழக்கமாக இருந்தது. அகிலத்தையும் அரசாளும் தேவன் மனிதனோடு பேசி அவனோடு சமயம் செலவழிப்பதில் மகிழ்ந்திருந்தார். இதை எண்ணிப்பாருங்கள், வியப்பானதாக இருக்கும். முன்பும் இது தேவனுக்கு விருப்பமான காரியம்; இப்போதும் இது தேவனுக்கு விருப்பமான காரியமே. தேவனுடைய நித்திய விருப்பம் **"நம்முடைய தேவனாக இருந்து நம்மோடு நமக்குள் வாசமாயிருப்பது"** ( *ஆதி 5:22; யாத் 20:2-8; 25:8; 29:45-46; லேவி 25:38; 26:12; யோவான் 1:14; 14:23; 17:23; 1 பேதுரு 2:5; எபே 2:2; வெளி 21:3* ). மனிதனுடைய வீழ்ச்சிக்குப்பின்னும் தேவன் செய்த முதல் காரியம் 'மனிதனோடு பேச முயற்சித்தது' ***ஆதி 3:9.***

## தேவனுடைய சத்தத்தை கேட்பதன் முக்கியத்துவம்

***ஏசா 5:13*** *என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சிறைப்பட்டுப்போகிறார்கள்;........*
***ஓசி 4:6*** *என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்து விடுவேன்;.......*
***சங் 32:8*** *நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன். 9 வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்கவேண்டாம்.*
தேவனோடு ஒரு நல்லுறவில் இருப்பதற்காகவே மனிதனை தேவன் சிருஷ்டித்தார். அவனை இவ்வுலகத்தின் அதிபதியாக்கி மிகவும் நன்மையானவற்றையே அவனுக்கு கொடுக்க தேவன் விரும்பினார். முதலில் இருந்தே என்ன செய்ய வேண்டும், செய்யக்கூடாது என்று அவனோடு பேசி போதித்து நடத்திக்கொண்டிருந்தார். ஆனாலும் மனிதன் தேவன் சொல்லியவற்றை கேட்காமல் மொத்த மனுக்குலத்தையும் அழிவுக்குள்ளாக்கினான். இன்றும் அதைப்போன்ற காரியமே தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மனிதன் தேவனுடைய சத்தத்துக்கு செவி சாய்த்து ஒரு நல்ல செழிப்பான வாழ்க்கை வாழவே தேவன் விரும்புகிறார். ஒரு கண் தெரியாத மனிதனைப்போல காரியங்களை செய்ய வேண்டியதில்லை. தடுக்கி விழுந்து, எழுந்து, அடி பட்டு, கற்று வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. இதனால் சமயமும், பெலனும், ஆரோக்கியமும், சகலமும் வீணாக விரயமாகும். இப்படி இல்லாமல் நாம் தேவனுடைய சத்தத்துக்கு செவி சாய்த்து வாழ்ந்தால்

வாழ்க்கையின் எல்லா காரியங்களையும் தோல்விகள் இன்றி செய்ய முடியும். ( *மத் 11:15; 13:9,43; மாற்கு 4:9,23; 7:16; லூக்கா 8:8; 14:35* ). பல அன்பான விசுவாசிகளுக்கும், **"தேவன் அவர்களோடு எப்போதும் பேசிக்கொண்டேதான் இருக்கிறார், அவர்களால் தேவன் பேசுவதை தெளிவாக கேட்க முடியும் "** என்ற ஒரு அடிப்படை சத்தியத்தை பற்றியதான அறிவு இல்லை. இந்த அறிவு இல்லாததால் பலரும் 'சிறைப்பட்டு, சங்காரமாகிப்போகிறார்கள்'. தேவனுடைய சத்தத்தை கேட்டு நடப்பதன் மூலம் மாத்திரமே ஒரு விசுவாசியால் தேவனுடைய சித்தத்தை தன் வாழ்க்கையில் நிறைவேற்ற முடியும்,

## அவருடைய சத்தத்தை கேட்பதற்கான திறனை தேவன் நமக்கு தந்திருக்கிறார்

***யோவா 10:3*** *வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்;* ***ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது.*** *அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டுபோகிறான்.*
***யோவா 10:27*** ***என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது;*** *நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது.*

இயேசு கிறிஸ்து, யோவான் 10 வது அதிகாரத்தில், விசுவாசிகளுக்கும் தனக்கும் உள்ள உறவை ஒரு நல்ல மேய்ப்பனுக்கும் ஆடுகளுக்கும் இடையில் இருக்கிற உறவுக்கு ஒப்பிடுகிறார். இங்கே இரண்டு இடங்களில் இயேசு சொல்லுகிறார் ***"ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது". "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது".***
***மத் 11:15; 13:43 மாற்கு 4:9*** லும் இன்னும் பல இடங்களிலும் **'கேட்பதன்'** முக்கியத்துவத்தை தேவன் எடுத்துரைத்திருக்கிறார். இவ்விடங்களில் எல்லாம் இது நம் காதுகளால் கேட்பது மாத்திரம் அல்ல, **"தேவன் சொல்லுவதை நாம் புரிந்து கொள்வதை"** இயேசு சொல்லியிருக்கிறார் என்பதை நாம் மனதிலாக்கிக்கொள்ளலாம். **நமக்கு தேவன் சொல்வதை கேட்டு அதை புரிந்து கொள்ளும் திறன் இல்லாமல் இருந்திருந்தால், அதை நாம் செய்யுமாறு தேவன் சொல்லியிருக்க மாட்டார்.**
***யோவான் 10:3, 10:27*** சொல்லுகிறது **'ஆடுகள் அவர் சத்தத்துக்கு செவி கொடுக்கிறது'.** 'செவிகொடுக்கிறது' என்பதற்கான ஆங்கில வார்த்தை **'hear'.** இதன் கிரேக்க வார்த்தை **'akouo'** என்பதாகும் இதன் அர்த்தம் 'கேட்பது' 'புரிந்து கொள்வது'. இங்கே 'கேட்க முடியும்' 'கேட்கலாம்' என்று வசனங்கள் சொல்ல வில்லை **'கேட்கிறது'** (செவி கொடுக்கிறது) என்றே சொல்லுகின்றன. இதன் அர்த்தம், **"மறுபடியும் பிறந்த எல்லா தேவனுடைய மக்களும் எப்போதும் தேவனுடைய சத்தத்தை கேட்டுக்கொண்டேதான் இருக்கிறார்கள்". தேவன் எப்போதும் அவர்களுடன் பேசிக்கொண்டேதான் இருக்கிறார். ஆனால் பலவித காரணங்களினால் அவர்கள்தான் அந்த சத்தத்தை கேட்டு புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள்.**
***ஏசா 28:23*** *செவிகொடுத்து என் சத்தத்தைக் கேளுங்கள்; நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள்.*
***ஏசா 28:26*** *அவனுடைய தேவன் அவனை நன்றாய்ப் போதித்து, அவனை உணர்த்துகிறார்.*
***ஏசா 30:21*** *நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.*
***யோவா 14:26*** *என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.*
***யோவா 16:13*** *சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.*

## தேவன் பேசுவதை கேட்பது நம் உடன்படிக்கை உரிமை

***எபி 8:11*** *அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை.*
புது உடன்படிக்கையில் தேவன் நமக்கு தந்திருக்கும் ஒரு மகத்தான உரிமை **"தேவனை நேரடியாக அறிந்து கொள்வது".** தேவனிடம் இருந்து அனைத்தையும் நாம் அறிந்து கொள்ள முடியும் என்று ***1 யோவான் 2:27*** சொல்லுகிறது. ***1யோவா 2:27*** *நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.*
தேவன் பேசுவதை நாம் கேட்க வேண்டும் என்று நாம் விரும்புவதை விடவும் தேவன் அதிகமாக விரும்புகிறார். தேவன் பேசுவதை கேட்பது நமது உடன்படிக்கையின் உரிமை. தேவன் தன் உடன்படிக்கையை முழுவதுமாக நிறைவேற்றுகிறவர். அதில் ஒன்றையும் மீறமாட்டார். தேவன் நம்மோடு பேசுகிறார் என்றால் **'அவர் நிச்சயமாக பேசுகிறார்'.** தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையும் இதன் நன்மைகளை முழுமையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

## தேவன் நம்மோடு தனிப்பட்ட முறையில் பேசுகிறார்

***யோவா 10:3*** *வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது.* ***அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு****, அவைகளை வெளியே நடத்திக் கொண்டுபோகிறான்.*
**"தேவன் நம்முடைய பெயர்களை அறிந்திருக்கிறார்"** என்ன ஒரு சிறப்புரிமை! நாம் தேவனுக்கு விலையுயர்ந்தவர்கள். 99 ஆடுகளை விட்டு, காணாமல் போன ஒரு ஆட்டை தேடிப்போகும் தேவன் நம் தேவன். தேவன் எப்போதும் நம் ஒவ்வொருவரோடும் தனிப்பட்ட முறையில் உறவு வைத்திருக்கிறார். நாம் ஒவ்வொருவரும் அவருக்கு முக்கியமானவர்கள். தேவன் தன் அனைத்து அலுவல்களுக்கு மத்தியிலும் நம்மோடு தனிப்பட்ட

முறையில் பேசுவதற்கு சமயம் செலவழிக்கிறார். அவர் ராஜாக்களோடும், ராஜ்யங்களோடும், தீர்க்க தரிசிகளோடும், விசேஷித்த மனிதர்களோடும் மாத்திரமல்ல, தன் மக்கள் ஒவ்வொருவரோடும் தனிப்பட்ட முறையில் பேசுகிறார்.

## தேவன் எவ்வாறு பேசுகிறார்

**தேவன் இயற்கையின் வாயிலாக, சூழ்நிலைகளின் வாயிலாக பேசுகிறார்**

***ரோம 1:19*** *தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.*

*20 எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை.*

**தன் குரல் மூலமாக பேசுகிறார்.** *ஆதி 3:14; 4:9; 6:13; 12:1-3; 25:23; உபா 5:22-24; 1 சாமு3:4.*

**தேவ தூதர்கள் மூலமாக பேசுகிறார்.** *ஆதி 16:7; 22:11; யாத் 3:2; எண் 22:32; நியா 2:4; 6:11; 13:3; 1 ராஜா 19:5; லூக்கா 1:11,13, 28; அப் 5:20; 8:26; 12:8; 27:24.*

**ஊரிம், தும்மிம் மூலமாக.** *லேவி16:8;யோசு18:6-10; 1சாமு 14:42; 1நாளா 24:31;25:8; 26:13-14; எண் 27:18-23).*

**தரிசனங்கள் வாயிலாக.** *ஆதி 15:1; 46:2; யோபு 33:15-18.*

**ஞானதிருஷ்டி மூலமாக.** (ஞான திருஷ்டி என்பது சூழ்நிலைகளை மறந்து சரீரத்தில் இருந்து வெளியேறி இருப்பது போன்ற ஒரு நிலை) *எண் 24:4,16; அப் 10;10; 11:5; 22:17.*

**சொப்பனங்கள் வாயிலாக.** *ஆதி 20:3,6; 31:10-11, 31:24; 1 ராஜா 3:5; மத் 1:20, 2: 2:12, 13-22..*

**தீர்க்கதரிசிகள் மூலமாக.** வேதாகமம் முழுவதும் தேவன் தன் தீர்க்கதரிசிகள் மூலமாக பேசிய பல நிகழ்வுகளை நாம் காணலாம்.

***எபி 1:1*** *பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், 2 இந்தக்* ***கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்;*** *இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.*

வேதாகமம் தேவனுடைய "எழுதப்பட்ட வார்த்தை".

## இப்போது தேவன் எவ்வாறு பேசுகிறார், நாம் எவ்வாறு தேவன் பேசுவதை கேட்கிறோம் ?

மேலே குறிப்பிட்ட அனைத்து வழிகளிலும் தேவன் நம்மோடு பேச முடியும் என்றாலும், இப்போது தேவன் அவ்வழிகளை அதிகமாக உபயோகிப்பது இல்லை. இப்போது தேவன் நம்மோடு பேசுகிற முக்கியமான வழி ' ஆவியோடு ஆவியின் தொடர்பு '.

***யோவா 4:24*** *தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.*

தேவனோடு தொடர்பும் அவரை தொழுது கொள்ளுவதும் **"ஆவியில் - ஆவியின் மூலமாகவே"** நடைபெற வேண்டும். பல அருமையான விசுவாசிகளும் தேவன் பேசுவதை கேட்க முடியாமல் இருப்பதன் ஒரு காரணம் **'இந்த சத்தியம் அவர்களுக்கு தெரியாமல் இருப்பது'**. பலரும் பொதுவாக நினைப்பது, 'தேவன் தன் சொந்த குரலில் பேசுவதை கேட்பது, இயேசுவை நேரடியாக காண்பது, தரிசனங்களை பார்ப்பது, ஒரு தீர்க்கதரிசி நம்மை பற்றி ஒரு நல்ல தீர்க்க தரிசனம் சொல்வது, ஒரு தேவ தூதன் வந்து பேசுவது போன்றவைகள்தான் மகாப்பெரிய ஆசீர்வாதமான காரியங்கள்' என்று. ஆனாலும் இது வேதாகமத்தின் படி உண்மை அல்ல. இவைகள் எல்லாம் ஆசிர்வாதமானவைகளே. தேவன் பழைய ஏற்பாட்டின் காலத்தில் எப்போதும், புதிய ஏற்பாட்டின் காலத்தில் சில சமயங்களிலும் இக்காரியங்களை செய்திருக்கிறார். ஆனாலும் இவை எல்லாம் தேவன் நம்மோடு தொடர்பு கொள்வற்கான பிரதான வழிகள் அல்ல. இவை எல்லாவற்றையும் விட மிகச்சிறந்த, மகாப்பெரிய, மிகவும் ஆசீர்வாதமான, மிகவும் மேன்மையான வழி **" தேவனுடைய ஆவி நம்முடைய ஆவியோடு நேரடியாக தொடர்பு கொள்வது"**. இதைத்தான் இயேசு தெளிவாக *யோவான் 4:24* ல் சொல்லியிருக்கிறார்.

***யோவா 8:47*** *தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்; நீங்களும் தேவனால் உண்டாயிராதபடியினால் செவிகொடாமலிருக்கிறீர்கள் என்றார்.* ( ***யோவான் 8:3; 10:27*** ). இவ்வசனங்கள் எல்லாம் குறிப்பிடுவது - **'மறுபடியும் பிறந்த எல்லா மக்களும் தேவன் பேசுவதை கேட்கிறார்கள்'.**

***1கொரி 6:17*** *அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்.*

நாம் - ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று பாகங்களோடு சிருஷ்டிக்கப்பட்டவர்கள் ( ***ஆதி 2:7, 1 தெச 5:23, எபி 4:12*** )

மறுபடியும் பிறப்பதற்கு முன்பதாக, மனிதனுடைய ஆவியில் பாவ சுபாவம் இருக்கிறது, அது மரித்த ஆவியாய் தேவனோடு தொடர்பு இல்லாமல் இருக்கிறது. இதனால்தான் மறுபடியும் பிறக்கும்போது அந்த ஆவி மறுபடியும் பிறந்து, தேவனோடு ஆவியோடு ஒன்றாக இணைந்திருக்கிறது. இப்போது நம் ஆவிக்குள் மறுபடியும் பிறந்த ஆவி, புது ஆவி, தேவனுடைய ஆவி என்று இல்லாமல் **'ஒரே ஆவியாக'** இருக்கிறது. மறுபடியும் பிறக்காத மனிதர்களுடைய ஆவி தேவனோடு பூரண தொடர்பு கொள்ள முடியாமல் இருப்பதால்தான், வேதாகமத்தின் பல இடங்களில் தேவன் பலவிதமான வழிகள் மூலம் அவர்களோடு தொடர்பு கொள்ள வேண்டியதிருந்தது. ஆனால் இப்போது அப்படி அல்ல. மறுபடியும் பிறந்த ஒவ்வொருவரோடும் தேவன் ஆவியில் தொடர்பு கொள்ள முடியும். *( குறிப்பு. 1 ).*

மேலும், இப்போது நமது மறுபடியும் பிறந்த ஆவி பரிசுத்த ஆவியினால் மூடி முத்திரையிடப்பட்டிருக்கிறது. அதாவது எந்தவித அசுத்தமும் நம் மறுபடியும் பிறந்த ஆவியை தாக்காதபடி பரிசுத்த ஆவியால் நம் ஆவி பாதுகாப்பாக மூடி முத்திரையிடப்பட்டிருக்கிறது.

***எபே 1:13*** *நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட* ***பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்.***

நம் ஆவியின் ஒரு முக்கியமான செயல்பாடு - **'உள்ளுணர்வு':**

**உள்ளுணர்வு:** மனித சரீரத்துக்கு உணர்வுகள் இருப்பதை போல, மனித ஆவிக்கும் உணர்வுகள் உண்டு. **உதாரணம்;** உற்சாகம் ***(மத் 26:41),*** அறிவது ***(மாற்கு 2:8 ),*** பெருமூச்சுவிட்டு ***(மாற்கு 8:12),*** கலங்கித்துயரமடைதல் ***( யோவான் 11:33 ),*** வைராக்கியம் ***( அப் 17:16 ),*** ஆறுதல் ***( 1 கொரி 16:18 ),*** கட்டுண்டு ***( அப் 20:22 ).*** ஆவியின் இந்த உணர்வுகளைத்தான் நாம் உள்ளுணர்வு என்று அழைக்கிறோம். இது ஆவியில் இருந்து நேரடியாக வருவது. இது வெளிப்படையான தூண்டுதல்களில் இருந்து வருவதல்ல. நம்ஆவியில் இருந்து நேரடியாக வருவது. உதாரணத்துக்கு, நாம் ஒரு செயலை செய்ய தீர்மானித்து தொடங்கும்போது, நம்முள்ளில் இருந்து ஏதோ ஒன்று அது வேண்டாம் என்று தடுப்பது போல இருக்கும். இதுவே உள்ளுணர்வு. நம் வாழ்வில் பல சமயங்களிலும் நாம் ஏதாவது ஒரு காரியத்தை செய்து, அது பின் தவறுதலாக முடிந்த பின், "இதை செய்யு முன்பு இதை இப்படி செய்ய வேண்டாம் என்று எனக்குள் ஏதோ சொன்னது, ஆனாலும் நான் செய்து விட்டேன்" என்று நாம் வருந்துவதுண்டு. இதுதான் உள்ளுணர்வு.

## இந்த உள்ளுணர்வில்தான் அபிஷேகம் நமக்கு போதிக்கிறது.

***1யோவா 2:27*** *நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.*

அதாவது பரிசுத்த ஆவி தருகிற அபிஷேகம் நம் ஆவியின் 'உள்ளுணர்வில்' நமக்கு போதிக்கிறது. நமது சரீரத்தில் ஒரு எண்ணெய் தேய்க்கப்படும்போது எப்படி நமக்கு உணர முடிகிறதோ, அது போலவே பரிசுத்த ஆவி கொடுக்கிற அபிஷேகத்தை - ஒரு காரியத்தை பற்றிய பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டை - நம் ஆவி உணர்ந்து கொள்ளும். அது நடப்பது நம் உள்ளுணர்வில்.

தேவன் நம்மோடு எப்படி 'ஆவி - ஆவியில்' பேசுகிறார், அதை நம் மனது எவ்வாறு புரிந்து கொள்ளுகிறது என்பதை பவுல் அப்போஸ்தலன் ***1 கொரி 2:9 - 16*** வசனங்களில் தன் அனுபவத்தின் மூலம் மிக தெளிவாக விளக்குகிறார்.

***1கொரி 2:9*** *எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை;*
*10 நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். 11 மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். 12 நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.*
*13 அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, அவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்.*
*14 ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். 15 ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 16*
*கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது.*

பரிசுத்த ஆவியானவர் நம் ஆவியோடு தொடர்பு கொள்ளும்போது (பேசும்போது), பரிசுத்த ஆவியானவரின் உணர்வை நம் ஆவியின் உணர்வு அறிந்து கொள்கிறது. நம் ஆவியின் உணர்வில் இருந்தே நாம் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துகின்றவற்றை அறிந்து கொள்கிறோம்.

இங்கே **'அறிவதற்கும்' 'புரிந்து கொள்வதற்கும்'** உள்ள வேறுபாட்டை நாம் மனதிலாக்கிக்கொள்ள வேண்டும். **'அறிவது'** நம் **ஆவியில்** நடக்கிறது. **'புரிந்து கொள்ளுதல்'** நம் **மனதில்** நடக்கிறது. நம்முடைய ஆவியின் உள்ளுணர்வினால் பரிசுத்த ஆவி சொல்லுவதை நாம் அறிந்து கொள்ளுகிறோம், பின் அது நம் மனதுக்கு தெரிவிக்கப்பட்டு மனது அதை புரிந்து கொள்ளுகிறது. நம் ஆவியின் உள்ளுணர்வில், பரிசுத்த ஆவியின் தூண்டுதலை நாம் அறிந்து கொள்கிறோம். நம் ஆத்துமாவின் மனதில் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலை புரிந்து கொள்கிறோம். அபிஷேகம் இவ்வாறு எல்லா காரியங்களையும் பற்றி நம்மை போதிக்கும். இவ்வாறு நமது ஆவியில் ஒரு உணர்வு ஏற்படும்போது தேவன் நம்மோடு பேசுகிறார் என்று நாம் அறிந்து கொள்ளலாம். இதைத்தான் **ஆவிக்குரிய விவேகம்** என்று வேதாகமம் அழைக்கிறது.

***கொலோ 1:9*** *இதினிமித்தம், நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறோம்; நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும்,*
*10 சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்,*

பவுல் அப்போஸ்தலன் கொலோசெய விசுவாசிகளுக்காக ஜெபிக்கும் வார்த்தைகள் இவை. ஒரு விசுவாசி, தேவனுடைய சித்தத்தை அறிவதற்கு முன்பாக, அவருக்கு **ஆவிக்குரிய விவேகம்** இருக்க வேண்டும் என்று

இவ்வார்த்தைகள் சொல்கின்றன. தேவனுடைய சித்தத்தை அறிந்து கொண்டால்தான் ஒரு விசுவாசி (1) சகலவித நற்கிரியைகளாகிய கனிகளை கொடுக்க முடியும், (2) தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைய முடியும் (3) கர்த்தருக்கு பிரியமுண்டாக அவருக்கு பாத்திரராய் நடந்துகொள்ள முடியும்.

தேவன் நமக்கு ஞானத்தின் ஆவியை தருகிறார் ( *எசா 11:2; எபே 1:17* ). தேவன் நமக்கு ஆவிக்குரிய விவேகத்தையும் தருகிறார். "உலகப்பிரகாரமான விவேகம்" எவ்வாறு உலகப்பிரகாரமான காரியங்களை கற்பதில் இருந்து வருகிறதோ, அப்படியே 'ஆவிக்குரிய விவேகமும்' ஆவிக்குரிய காரியங்களை கற்பதில் இருந்து வருகிறது ( வேத படிப்பு, நல்ல கூட்டாய்மை, நல்ல வேத போதனைகள், உபவாசத்துடனான ஜெபம் ). நாம் நம் ஆவியில் பெற்றுக்கொள்ளும் அனைத்தும் விவேகத்தால் தெரிந்து கொள்ளப்படவேண்டும். அப்போதுதான் வெளிப்பாட்டின் உண்மையான அர்த்தத்தை நாம் அறிய முடியும். வெளிப்பாடு என்பது நாம் தேவனிடம் இருந்து பெற்றுக்கொள்வது; ஆவிக்குரிய விவேகம் என்பது 'நாம் தேவனிடம் இருந்து பெற்றுக்கொண்ட வெளிப்பாட்டை அறிந்து கொள்வது'. நம் ஆவியில் நடக்கும் அனைத்து உணர்வுகளின் அர்த்தங்களையும், ஆவிக்குரிய விவேகம்தான் நமக்கு சொல்லித்தர முடியும். 'நம் ஆவி தேவனிடம் இருந்து வெளிப்பாடுகளை பெறுகிறது; இந்த வெளிப்பாடுகளை நம் ஆவியின் உள்ளுணர்வு உணர்கிறது; இந்த வெளிப்பாடுகளின் அர்த்தத்தை ஆவிக்குரிய விவேகம் நமக்கு விளக்குகிறது; இம்முறையில்தான், தேவனோடு உள்ள நமது கூட்டாய்மை செயல்படுகிறது'. நம்முடைய சுய புரிந்துகொள்ளுதலால் ஒன்றையும் முழுமையாக தெரிந்து கொள்ள முடியாது. நம் ஆவி நம் புரிந்து கொள்ளுதலை தெளிவுபடுத்தும்போது, தேவனுடைய அசைவுகளின் குறிக்கோளை நம் புரிந்து கொள்ளுதல் தெரிந்து கொள்ளும். இப்படியாகத்தான் தேவன் நம்மோடு பேசுவதும் அதை நம் மனது புரிந்து வார்த்தைகளால் நமக்கு தெரியப்படுத்துவதும் நடக்கிறது.


## வெளிப்பாடுகளின் அறிவை அந்நியபாஷையினால் தெளிவுபடுத்துதல்

நாம் அந்நிய பாஷையில் பேசும்போது நம் ஆவி தேவனோடு பேசுகிறது. அதனால் தேவனுடைய இரகசியங்கள் நம் ஆவியின் மூலமாக நமக்கு வெளிப்படுத்தப்பட முடியும்.

*1கொரி 14:2 ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்.*

பவுல் அப்போஸ்தலன், தான் பெற்றுக்கொண்ட இரகசியங்களின் வெளிப்பாடு தேவனுடைய ஆவியினால் கிடைத்தது என்று சொல்கிறார் ( *1 கொரி 2:10* ). நாம் அந்நிய பாஷையில் பேசும்போது, நம்முடைய ஆவி, பரிசுத்த ஆவியின் வல்லமை மூலமாக ( *அப் 2:4; யூதா 20* ) ஜெபிக்கிறது ( *1 கொரி 14:14* ). அந்நிய பாஷையில் பேசி அதை வியாக்யானம் செய்யும்போது, தேவனுடைய இரகசியங்களை நாம் அறிந்து கொள்ள முடியும்.

இது எவ்வாறு செயல்படுத்தப்பட முடியும் என்று பார்ப்போம். நாம் பல காரியங்களில் தேவனுடைய வழிநடத்துதலை, அல்லது ஒரு கேள்விக்கான பதிலை அல்லது ஒரு விளக்கத்தை தேவனிடம் கேட்டிருப்போம். அப்போது நாம் அந்நிய பாஷையில் பேசி அதன் வியாக்யானத்துக்காக விசுவாசிக்க வேண்டும். அப்போது அதன் வெளிப்பாடுகளை நாம் பெற்றுக்கொள்வோம். நம் மனது இந்த வெளிப்பாடுகளை அந்நிய பாஷையினால் 'புரிந்து கொள்ளும்'. இந்த வெளிப்பாடுகள் நாம் தேவனிடம் கேட்பவற்றின் பதில் அல்லது விளக்கம் அல்லது வழி நடத்துதலாக இருக்கும். பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் இதன் மூலம் தேவனிடம் இருந்து எதற்கும் பதில் பெற்றுக்கொள்ளலாம்.




இதற்கு சற்று பயிற்சி அவசியம். ஏனென்றால், தேவன் மனிதனை சிருஷ்டித்த போது, மனிதன் எல்லாவற்றையும் " தேவன் - மனிதனின் ஆவி - மனிதனின் மனம் - மனிதனின் சரீரம் " என்ற வரிசையில் செய்யும்படியாகவே சிருஷ்டித்திருந்தார். அதாவது தேவன் சொல்வதை மனித ஆவி கேட்டு, ஆவி சொல்லுவதை மனம் கேட்டு, மனம் சொல்வதை சரீர உறுப்புகள் கேட்டு சகலமும் செய்யப்பட வேண்டும். இதுவே தேவனுடைய சித்தம். ஆனால் மனிதன் இந்த முறையை தலைகீழாக மாற்றினான்.

*ஆதி 3:6 அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.*

இதுதான் விழுந்த மனிதனின் சுபாவம். தன் சரீரத்துக்கு இஷ்டப்பட்டதை, தன் மனதுக்கு இஷ்டப்பட்டதை செய்வது. மறுபடியும் பிறந்த ஒருவரும், தான் மறுபடியும் பிறப்பதற்கு முன்பாக பல வருடங்களாக 'தன் சரீரம், மனம் சொல்வதை கேட்டே நடந்திருப்பார். இது அவரது மனதுக்கு பழகிப்போய் இருக்கும். இந்த மனம்

எப்போதும் 'உலகத்தின்' சத்தத்தை கேட்டே பழகிப்போய் இருக்கும். ஒரு நாள் திடீரென்று 'தேவனுடைய சத்தத்தை' கேள் என்று கட்டளையிடும்போது, அது சற்று சிரமமாக இருக்கும். ஆனால் சற்று பயிற்சி செய்யும்போது மனம் தேவனுடைய சத்தத்தை கேட்டு புரிய நன்றாக பழகிக்கொள்ளும்.

*எபி 5:14 பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானோந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.*

## தேவனுடைய சத்தத்தை கேட்பதற்கான தடைகளும் அவற்றை மாற்றும் வழிமுறைகளும்

*1இரா 19:12 பூமி அதிர்ச்சிக்குப்பின் அக்கினி உண்டாயிற்று; அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை; அக்கினிக்குப்பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று.*

தேவன் நம்மோடு அமர்ந்த மெல்லிய சத்தத்தில் பேசுகிறார். அதைக்கேட்க வேண்டுமென்றால் நாம் அமைதியாக அமர்ந்திருக்க வேண்டும் ( *சங் 46:10* ). பலரும் தங்கள் அன்றாட வாழ்க்கையில் எப்போதும் உலகத்தின் சத்தங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதனால்தான், தேவனுடைய சத்தத்தை கேட்க முடிவதில்லை.

*மாற் 4:18 வசனத்தைக் கேட்டும், உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போட, அதினால் பலனற்றுப்போகிறார்கள்.*

நம் அனுதின வாழ்க்கையில் தேவன் பேசுவதை கேட்பதற்கென்று ஒரு விசேஷ சமயத்தை ஒதுக்க வேண்டும். அவ்வாறு தொடர்ந்து செய்து கொண்டிருக்கும்போது நாம் தேவன் பேசுவதை கேட்பதை ஒரு பழக்கமாக்கிக்கொள்ளலாம்.

நம் மனது எப்போதும் தேவனை நோக்கி இருக்க வேண்டும்.

*ஏசா 26:3 உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்.*

தேவன் நம்முடைய ஆவியோடுதான் பேசுகிறார்; நம் ஆவிதான் உண்மையில் தேவன் பேசுவதை 'கேட்கிறது'. ஆனால் பிரச்சினை என்னவென்றால், பலரும் தங்களது ஆவிக்கு கட்டுப்பட்டு நடப்பதில்லை. மாறாக தங்கள் மனதின் மாயைகளுக்கு கட்டுப்பட்டு நடக்கிறார்கள் ( *எபே 4:17-18* ). தங்கள் மனதுக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதை செய்கிறார்கள். இதைத்தான் வேதாகமம் **'ஆவியின்படி நடக்காமல் மாம்சத்தின்படி நடப்பது'** என்று அழைக்கிறது ( *கலா 5:16-18* ). இது தேவன் பேசுவதை கேட்பதற்கு ஒரு பெரிய தடை. இப்படி நடக்கும்போது தேவன் பேசுவதை கேட்க முடியாது.

ஜெபம், வேத படிப்பு, உபவாசம், கூட்டாய்மை போன்ற வழிகள் மூலம் நம் மனதை உலகத்தின் சத்தங்களை கேட்பதில் இருந்து பிரித்தெடுத்து, நம் ஆவியோடு எப்போதும் பேசிக்கொண்டிருக்கும் தேவனுடைய சத்தத்தை மீண்டும் கேட்குமாறு பழக்கப்படுத்த வேண்டும்.

இதை ஒரு உதாரணத்தின் மூலமாக மனதிலாக்கிக்கொள்ளலாம். தொலைக்காட்சி நிலையங்கள் எப்போதும் தங்கள் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பிக்கொண்டேதான் இருக்கின்றன. ஆனாலும் நாம் அந்நிகழ்ச்சிகளை பார்க்க, கேட்க வேண்டுமென்றால் நமது தொலைக்காட்சி பெட்டியின் அலைவரிசை ஏற்பாடுகளை அந்த குறிப்பிட்ட தொலைக்காட்சி அலைவரிசைக்கு ஏற்றபடி ( **tune** ) செய்ய வேண்டும். அப்போது நாம் நிகழ்ச்சிகளை காண முடியும். ஒரு வேளை நாம் நிகழ்ச்சிகளை சரியாக பார்க்க, கேட்க முடியாவிட்டால், நமது தொலைக்காட்சி பெட்டிகளை சரி செய்ய வேண்டும்; தொலைக்காட்சி நிலையத்தை அழைத்து அதை சரி செய்ய சொல்ல வேண்டியதில்லை. பலரும் தேவன் பேசுவதை கேட்க முடியாவிட்டால், தேவனே பேசும் என்று ஜெபிக்கிறார்கள். தேவன் எப்போதும் பேசிக்கொண்டேதான் இருக்கிறார். நாம் நம்மை தேவன் பேசுவதை கேட்கும்படி சரி செய்தால் போதும். தேவனை சரி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

தேவன் நம் ஆவி மூலமாக பேசுகிறார். அதை நாம் புரிந்து கொள்ளும்போது அது 'நமது சத்தம்' போல இருக்கும். அச்சமயங்களில் அது தேவனுடைய சத்தமா, நமது சத்தமா என்று நாம் சரியாக புரிந்து கொள்ள வேண்டும். தேவன் பேசும்போது " நீ இப்படி செய்ய வேண்டும்; அல்லது அப்படி செய்யக்கூடாது என்று சத்தம் போடுவது இல்லை". தேவன் நம் ஆவியோடு பேசி நாம் அதை மனதிலாக்கும்போது நம் ஆவி இந்த முறையில் நம்மிடம் சொல்லும் **"நான் இப்படி செய்ய விரும்புகிறேன்...அப்படி செய்ய எனக்கு பிரியமில்லை..."** என்று. இதை கேட்கும்போதும் இது நமக்குத்தான் அப்படி தோன்றுகிறது என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. பலவேளைகளிலும் நாம், தேவன் பேசுவதை, நாம் பேசியதாக எடுத்து தேவன் பேசியதை கேட்காமல் போவதுண்டு.

'தேவன் பேசினால் கேட்பேன்' என்று ஏனோதானோ என்று வாழ்ந்து கொண்டிருப்பவர்களால் தேவன் பேசுவதை கேட்க முடியாது. நான் நிச்சயமாக தேவன் பேசுவதை கேட்க வேண்டும் என்று உறுதி பூண்டு, தேவன் பேசுவதை கேட்பதற்கு நம் வாழ்வில் முதலிடம் கொடுக்க வேண்டும். அப்போது நிச்சயமாக நம்மால் தேவன் பேசுவதை கேட்க முடியும் ( *எரே 29:13* ).

இன்று பலருக்கும் தேவன் பேசுவதை கேட்க வேண்டும் என்ற ஆவல் உண்டு. அதற்காக ஜெபிப்பதும் உண்டு. ஆனால் அதற்காக நேரமும், இடமும், மனமும் கொடுப்பதில்லை. எப்போதும் வேலைப்பளுவிலும் இன்னும் பலவிதமான காரியங்களிலும் மூழ்கி இருந்து விட்டு, " தேவனே 5 நிமிடம் உங்களுக்காக ஒதுக்குகிறேன், என்னோடு பேசும், எனக்கு அவசரமான மற்ற வேலைகள் இருக்கிறது, நான் போக வெண்டும் " என்று இருப்பவர்களால் தேவனுடைய சத்தத்தை கேட்க முடியாது.

### இருதயத்தின் வேண்டுதல்கள்

*சங் 37:3 கர்த்தரை நம்பி நன்மைசெய்; தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்.*
*4 கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்.*
*5 உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.*

இவ்வசனங்களின் அர்த்தம் நம்முடைய வேண்டுதல்களை எல்லாம், அல்லது நம் இச்சைகளை எல்லாம் தேவன் கொடுப்பார் 'என்பது அல்ல'. நாம் தேவனை நம்பி, நமது வழிகளை எல்லாம் அவரிடம் ஒப்புவித்து, அவர் சொல்லும்படி வாழ்ந்து கொண்டிருக்கும்போது 'தேவனது விருப்பமும் நமது விருப்பதும் ஒரே மாதிரியாகவே இருக்கும்' ***(யோவான் 8:29).*** இப்படி இருக்கும்போது தேவன் தன் 'விருப்பங்களை' நம் மனதில் போடுவார். அவைகளை நாம் நம் விருப்பமாக எடுத்துக்கொண்டாலும் அவை தேவனுடைய விருப்பங்களே. அப்போது தேவன் அவற்றை நிறைவேற்றுவார். இதற்கு நல்ல ஆவிக்குரிய முதிர்ச்சி அவசியம்.

## தேவனுடைய சித்தத்தை அறிந்து அதன்படி நம் வாழ்வில் ஒரு சரியான தீர்மானம் எடுப்பது எப்படி ?

### 1. நாம் இருக்கிற சூழ்நிலையில் இருந்து

*நீதி 4:26. உன் கால் நடையைச் சீர்தூக்கிப்பார்; உன் வழிகளெல்லாம் நிலைவரப்பட்டிருப்பதாக.*

*மத்தேயு 10:29-31. ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. 30. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. 31. ஆதலால், பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.*

*லூக்கா 12:6. இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுகிறதில்லை.*

ஒரு காசுக்கு இரண்டு குருவிகள், இரண்டு காசுக்கு ஐந்து குருவிகள் என்றால், ஒன்று இலவசமாக கொடுப்பது போல. அது கூட தேவனால் மறக்கப்படுவதில்லை. தேவன் அதை வீணாக சிருஷ்டித்து ஒரு இடத்தில் சும்மா வைக்கவில்லை. தேவனோடு நமக்குள்ள உறவின் முக்கிய நோக்கம் "எங்கெங்கோ போய் தேவனோடு இருப்பது அல்ல " "எங்கு போனாலும் தேவனோடு போவது. தேவனோடு இருப்பது ". அது எங்கு போனாலும், இருந்தாலும், வழி, இருப்பிடங்களை மாற்றினாலும்...எப்போதும் நாம் தேவனோடே இருக்க வேண்டும். அவருடைய ஓய்வில் அமர்ந்திருக்க வேண்டும். அவரை முழுமையாய் நம்பி இருக்க வேண்டும். எனவே தேவன் எங்கே நம்மை வைத்திருக்கிறாரோ அந்த இடத்தின் சூழ்நிலையை பார்த்து, உணந்து, அறிந்து அதன் படி நடந்து கொள்ள வேண்டும். தேவன் நமக்கு தந்திருக்கிற அறிவு, ஐம்புலன்கள், இவைகளை சரியாக உபயோகித்து நடந்து கொள்ள வேண்டும்.

### 2. நமக்குள் இருக்கிற பரிசுத்த ஆவியானவர் மூலமாய்

*ரோமர் 8:14. மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.*

*யோவான் 14:16 நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.*

*யோவான் 14:26, 15:26, 16:7.......* தேற்றரவாளன்.....ஆலோசனை சொல்லுகிறவர், நமக்காக வேண்டிக் கொள்கிறவர், நமக்காக வழக்காடுகிறவர்.

*யோவான் 14:26. .......எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து,*

*16:13.......சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.*

*16:15....பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.*

### 3. வேத வசனத்தின் மூலமாய்

*2 தீமோத்தேயு 3:16. வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, 17. அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.*

*2. பேதுரு 1:19அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். 20. வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. 21. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.*

*சங்கீதம் 138:2........... உமது சகல பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்.*

*சங்கீதம் 119:105. உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.*

எந்த விஷயத்திலும் தேவ வசனம் சொல்வதே இறுதி முடிவாக எடுக்கப்பட வேண்டும். தேவ வசனம் அவருடைய சித்தம்.

**4. சபையின் மூலமாய்.** *மத்தேயு 18:18. பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். 19. அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். 20. ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்.*

இரண்டு அல்லது மூன்று பேர் இயேசுவின் நாமத்தில் கூடுவது, சபை கூடுவதற்கு ஒப்பானது. இரண்டு பேர் ( விசுவாசிகள் ) ..எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் ....பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால்... பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்.....ஒரு முக்கிய முடிவு எடுக்க வேண்டுமென்றால் ஒரு நல்ல விசுவாசி, அல்லது சபை மூப்பர், போதகர் இவர்களோடு பேசி முடிவு எடுக்க வேண்டும்.

**இந்த நான்கும் எந்த விஷயத்தை ஒத்துக்கொள்கிறதுவோ - அதுவே தேவனுடைய சித்தம்.**

ஏதாவது ஒன்று ஒத்துக்கொள்ளாவிட்டால் அது தேவனுடைய சித்தம் அல்ல..
தேவனுடைய சித்தம் எப்பொழுதும் வேதவசனத்துடன் ஒத்துப்போகிறதாகவே இருக்கும்.
ஒரு போதும்...தேவனுடைய சித்தம் வேதவசனத்துக்கு எதிராக இருக்காது.

### தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வதன் சில உபயோகங்கள்.

**1. தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கும் உரிமை;** *மத் 7:21;பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.*

**2. விழாமல் பாதுகாப்பு;** *மத் 7:24;ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு. இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.*

**3. ஜெபத்தை தேவன் கேட்பார்;** *யோவான் 3:21;பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம், ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்.*

**4. என்றென்றைக்கும் நிலைத்திருத்தல்;** *1 யோவான் 2:17 உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.*

**5. இயேசுவின் சகோதரர், சகோதரி, தாய் என்ற உரிமை;** *மாற்கு 3:35. தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்குத் தாயுமாய் இருக்கிறான் என்றார்.*

## தேவனுடைய சித்தத்தை நம் அன்றாட வாழ்க்கையில் நிரூபிப்பது எப்படி ?

தேவனுடைய சித்தத்தை நாம் அறிந்த பிறகு அது நம் அன்றாட வாழ்க்கையில் நடத்தப்பட வேண்டும்.
நிரூபிக்கப்பட வேண்டும். அதாவது செயல் படுத்தப்பட வேண்டும். அதற்காக செய்யப்பட வேண்டிய முக்கிய காரியம்..*ரோமர் 12:1,2. அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. 2. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.*

இங்கே " பகுத்தறியத்தக்கதாக " என்ற வார்த்தையின் ஆங்கிலம்; prove. இந்த வார்த்தையின் கிரேக்க சொல் dokimazo. இந்த வார்த்தையின் அர்த்தம் " நம் வாழ்க்கையில் அனுமதிக்கப்பட வேண்டும், நிரூபிக்கப்படவேண்டும், என்ற ஆவலுடன் சோதித்து பார்ப்பது "
அதாவது நம் வாழ்க்கையில் - தேவனுடைய, நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் - அனுமதிக்கப்பட வேண்டும், நடக்க வேண்டும், நிரூபிக்கப்பட வேண்டும் என்ற ஆவலுடன் சோதித்து பார்ப்பது.

### இப்படி தேவனுடைய சித்ததை நாம் சோதிக்க வேண்டும் என்றால், அதை எப்படி செய்வது ?.

1. நம் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்.
2. நம் மனதை புதிதாக்கி மறுரூபமாக வேண்டும்.

நம் மனதை புதிதாக்க வேண்டும் என்றால், நம் மனதை வேத வசனங்களின் படி சிந்திக்கும் படியாக பழக்க வேண்டும். *ரோமர் 8:6. மாம்சசிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.*
இந்த இரண்டு காரியங்களையும் நாம் செய்வோமானால், நாம் நிச்சயமாக தேவனுடைய சித்தத்தை நம் வாழ்க்கையில் பகுத்தறிவோம் என்பது வேதாகமத்தின் ஒரு வாக்குத்தத்தம். இவைகளை நாம் செய்யும்போது தேவனுடைய சித்தத்தை நாம் வாழ்க்கையின் எந்த சூழ்நிலையிலும் அறிந்து கொள்வது மிகவும் எளிதாக இருக்கும். இன்னும் சொல்லப்போனால், இப்படி ஜீவிக்கும்போது நாம் தேவனுடைய சித்தத்தை தவற விடுவது

மிகவும் கடினம். நாம் தேவனுக்கு நம்மை முழுவதுமாக ஒப்புக்கொடுக்காமல் வாழும்போதுதான் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வது கடினமாக இருக்கும்.

## சரியான தீர்மானங்கள் எடுப்பதற்கான வழிகாட்டுதல்கள்

நாம் தேவனை நம் முழு இருதயத்தோடும் நம்பி, நம்முடைய சுயத்தின் மேல் சாராமல் இருக்கும்போது, தேவன் நம்மை கற்பித்து நமக்கு வழி காட்டுவதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

*சங் 32:8 நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.*

*நீதி 3:5 உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து,*
*6 உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.*

இதனால், நாம் ஒன்றையுமே பார்க்க வேண்டிய அவசியம் இல்லை,என்று எடுத்துக்கொள்ளக்கூடாது.*(நீதி 4:26. ).*

**வேத வசனங்கள்**. தேவன் தன் வார்த்தையின் மூலமாக நமக்கு வழி காட்டுவார்.

*சங் 119:105 (நூன்.)உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.*
தேவனுடைய வசனம் நம் கால்களுக்கு தீபமாகவும் நம் பாதைக்கு வெளிச்சமாகவும் இருக்க வேண்டுமென்றால், முதலில் அதை நன்கு படித்து அறிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் அது தீபமாக வெளிச்சமாக இருக்கும்.

**தேவனுடைய சத்தத்தை கேட்டல்.** இம்முறையில் நாம் ஒரு காரியத்துக்காக ஒரு குறிப்பிட்ட வழியில் செல்லும்போது அது சரியான பாதைதானா அல்லது முறையானதுதானா என்று தேவன் நமக்கு சொல்லித்தருவார்.

*ஏசா 30:21 நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.*
அப்படி செல்லும்போது தேவன் பேசுவதை நாம் கவனமாக கேட்டு செல்ல வேண்டும்.

**ஞானமான ஆலோசனைகள்.**

*நீதி 15:22 ஆலோசனையில்லாமையால் எண்ணங்கள் சித்தியாமற்போம்; ஆலோசனைக்காரர் அநேகர் இருந்தால் அவைகள் உறுதிப்படும்.*

*நீதி 19:20 உன் அந்தியகாலத்தில் நீ ஞானமுள்ளவனாயிருக்கும்படி, ஆலோசனையைக்கேட்டு, புத்திமதியை ஏற்றுக்கொள்.*
ஆலோசனை கேட்கும்போது நாம் யாரிடம் கேட்கிறோம் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். ஞானமான விசுவாசிகளிடம் இருந்து ஞானமான ஆலோசனைகள் வரும். மேலும், எல்லாவற்றுக்கும் மேலாக தேவனிடம் ஆலோசனை கேட்பது நல்லது. அவர்தான் 'ஆலோசனை கர்த்தர்' ( *ஏசாயா 9:6* ). அவர் தன் வார்த்தை மூலமாக பதில் சொல்வார் அல்லது ஒரு வேத வசனத்தின் மூலமாக பதில் சொல்வார் அல்லது இன்னொரு விசுவாசி மூலமாக பதில் சொல்வார்.

**நம்முடைய உத்தமம்** இன்னொரு நல்ல வழிகாட்டி. நம்முடைய சுத்திகரிக்கப்பட்ட மனசாட்சியும் பரிசுத்த ஆவியானவரும், நாம் செல்லும் வழிகள், எடுக்கும் தீர்மானங்கள் சரிதானா என்று நல்ல முறையில் நமக்கு சொல்வார்கள். *நீதி 11:3 செம்மையானவர்களுடைய உத்தமம் அவர்களை நடத்தும்; துரோகிகளின் மாறுபாடோ அவர்களைப் பாழாக்கும்.*

ஒன்றுக்கும் மேலான விஷயங்களில் முடிவு எடுக்க வேண்டும் என்றால் எது நம் இதயத்தில் மிகுந்த சமாதானத்தை தருகிறதோ அதை எடுத்துக்கொள்ள வேண்டும். அதன் பிறகு பயப்படக்கூடாது.

*கொலோசேயர்; 3;15. ....தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, ...*

ஆளக்கடவது, **[rule]** Greek: **brabeuo,** .நடுவர்...மத்தியஸ்தர்....தீர்மானிக்கிறவர்.

## அதிக உறுதியான தீர்க்க தரிசன வசனம் - எல்லாவற்றுக்கும் மேலான நீதிபதி.

*2பேது 1:19 அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்.*

*சங் 138:2 உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன்; உமது சகல பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்.*

வேத வசனத்துக்கு இணையானது ஒன்றும் இல்லை. தேவனிடம் இருந்து நாம் பெற்றுக்கொண்டதாக கருதும் வெளிப்பாடுகள், தேவனுடைய வார்த்தை, தேவனுடைய சத்தம், ஆவிக்குரிய ஞானம், தேவனுடைய ஆலோசனை, அந்நிய பாஷை வியாக்யானம், தரிசனங்கள், சொப்பனங்கள் இவை அனைத்தும் **"வேத வசனங்களுக்கு ஒத்ததாக இருக்க வேண்டும்".** தேவன் தன் எழுதப்பட்ட வார்த்தைக்கு எதிராக அல்லது வேறுபாடாக எதையும் சொல்ல மாட்டார். மேலும், நாம் கேட்கும் சத்தம் தேவனுடையதுதானா என்று எப்படி தீர்மானிப்பது ? நாம் காணும் தரிசனம், சொப்பனம் தேவனிடம் இருந்து வந்தது என்று எப்படி உறுதி செய்வது ? ஒருவேளை ஒரு தேவ தூதனோ அல்லது இயேசு கிறிஸ்துவோ நேரடியாக வந்து ஒருவரிடம் பேசினாலும் அது உண்மையில் தேவனுடைய தூதன் தானா, பேசியது உண்மையில் இயேசு கிறிஸ்துதானா என்று எப்படி அறிந்து கொள்வது ? - இவை எல்லாம் 'அதிக உறுதியான வசனத்துக்கு ஒத்துப்போக வேண்டும்'. அப்போதுதான் நாம் கேட்டதும், புரிந்ததும், கண்டதும், எல்லாம் தேவனிடம் இருந்து வந்தது என்று தீர்மானிக்க வேண்டும். இன்று பூமியில்

வாழுகிற யாரும் இயேசு கிறிஸ்து இந்த பூமியில் வாழ்ந்த போது சரீரப்பிரகாரமாக எப்படி இருந்தார் என்பதை நேரடியாக பார்த்தது இல்லை. மேலும் இதுதான் இயேசு கிறிஸ்துவின் புகைப்படம் என்று ஒரு படத்தையும் நாம் உறுதியாக சொல்லவும் முடியாது. ஒரு படத்தை, உருவத்தை, காட்சியை பார்த்து அல்லது ஒரு சத்தத்தை கேட்டு, இது இயேசுகிறிஸ்துவின் தோற்றம், சத்தம் என்று நம் மனதும் எண்ணங்களும் சொல்வதை நாம் உறுதியாக நம்பவும் முடியாது. பேதுரு இயேசுவை பற்றி கூறும்போது, அவர் இயேசுவோடு மூன்றரை வருடம் நெருங்கி பழகியவர், பிதாவின் சாட்சியையும் பரலோகத்தில் இருந்து வந்த சத்தத்தையும் கேட்டவர். ஆனாலும் அவர் '**அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனம்**' நமக்கு உண்டு என்று சொல்கிறார். **'தேவனிடம் இருந்து வந்தது' என்று சொல்லப்படும் எதுவும் நிச்சயமாக வேதவசனத்துக்கு ஒத்துப்போகும். வேதவசனத்துக்கு ஒத்துப்போகாத எதுவும் தேவனிடம் இருந்து வந்தது அல்ல.**

ஆகவே, தேவனுடைய சத்தத்தை கேட்டு, அவரது சித்தம் அறிந்து, தேவனுடைய வழிகாட்டுதலின்படி தீர்மானங்கள் எடுத்து வாழ வேண்டுமென்றால் 'வேதவசனங்களைப்பற்றி ஒரு நல்ல அறிவு இருக்க வேண்டும்'. ஒரு மேலோட்டமான அறிவு போதாது. நல்ல ஆவிக்குரிய முதிர்ச்சி இல்லாத ஒரு விசுவாசி கேட்கும் ஒரு சத்தத்தை, காணும் ஒரு தரிசனத்தை, ஒரு வெளிப்பாட்டை, ஒரு நல்ல ஆவிக்குரிய முதிர்ச்சி உள்ள ஒரு விசுவாசியிடம் கலந்தாலோசித்து அதன் பிறகு தீர்மானங்கள் எடுப்பது நல்லது. இம்முறையில் நாம் தேவனுடைய வழி நடத்துதலின்படிதான் தீர்மானங்கள் எடுக்கிறோம் என்பதை நன்கு உறுதி செய்து கொள்ளலாம். இப்படி தீர்மானங்கள் எடுத்து வாழும் ஒரு விசுவாசிக்கு '**தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை** ( *லூக்கா 1:37* ).

கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவில் நீங்கள் வெற்றிகரமாக நடக்கும்போது உங்கள் வெளிச்சம் இன்னும் அதிகமாக பிரகாசிக்கும். உங்கள் வெற்றியுள்ள வாழ்க்கையைப்பார்த்து, நீங்கள் தேவனால் நடத்தப்படும் பிள்ளை என்பதை மற்றவர்கள் அறிந்து கொள்ளட்டும். முறையான தீர்மானங்களை எடுத்து, சறுக்காத அடிகளை வைத்து, வெற்றிகரமான பாதையில் செல்லும் உங்கள் வாழ்க்கையைப்பார்த்து "இவர் பரிசுத்த ஆவியானவரின் சித்தப்படி, சத்தப்படி தீர்மானங்களை எடுக்கிறவர்" என்று மற்றவர்கள் தெரிந்து கொள்ளட்டும். நீங்கள் எப்படி வாழுகிறீர்கள் என்பது இந்த இருண்ட உலகுக்கு ஒரு வெளிச்சம். வேதவசனம் என்னும் தீபத்தோடு, வெளிச்சத்தோடு நடப்போம். நம் நல்ல மேய்ப்பனின் சத்தம் கேட்டு வாழ்க்கையின் ஒவ்வொரு அடிகளையும் எடுத்து வைப்போம்.

*நீதி 4:18 நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்.*

**ஆமென்.**

**Be blessed.**

**Bro D.Vergin Kumar.**

If you need any clarifications or if you have any doubts and oservations kindly write to me at deeveekumar@yahoo.com . I will reply you. Ph; 00968 25572195, 99663557.

**Resources:** Dakes Bible Commentary, Andrew Wommack Bible Commentary, Vine's Expository Dictionary of New Testament Words, Strong's Bible concordance, Wuest's Bible Commentary, Wuest's New Testament word Studies, Vincent's Word Studies in the New Testament , Spiritual Man - by Watchman Nee, “How to hear God's voice” by Andrew Wommack, Guidance - by Andrew Womack. All Bible quotes are from King James Version. In the Tamil Bible some verses may appear before or after the quoted references.

குறிப்பு 1. 'ஆவி, ஆத்துமா, சரீரத்தைப்பற்றி இன்னும் விளக்கமாக நீங்கள் அறிய விரும்பினால் இந்த இணைய தளத்தில் முன்பு வெளியிடப்பட்டுள்ள 'புது சிருஷ்டி, எப்படி இரட்சிக்கப்பட்டீர்கள்' போன்ற எமது வேத பாடங்களை படிக்கவும்.

----------------------------